## தலைப்பு 215 – தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம்

---

## 1. நிதிக் கூற்றுகள்

### 1.1 முனைப்பழியல்லாத அபிப்பிராயம்

தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிறசித் திணைக்களத்தின் 2018 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுக் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2018 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள் 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின்கீழ் கணக்காய்வுச் செய்யப்பட்டது. 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் 11 (1) பிரிவு பிரகாரம் தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் நிதிக் கூற்றுகள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புகள் உள்ளடக்கிய பொழிப்பு அறிக்கை 2019 ஆம் ஆண்டு மே மாதம் 28 ஆந் திகதி கணக்கு வழங்கும் உத்தியோகத்தரிடம் வழங்கப்பட்டது. கணக்காய்வுச் சட்டத்தில் 11(2) பிரிவு பிரகாரம் தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்திற்கு ஏற்புடையதான வருடாந்த விபரமான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 ஆம் ஆண்டு மே மாதம் 30 ஆந் திகதி கணக்கு வழங்கும் உத்தியோகத்தரிடம் வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் 154(6) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் 10 ஆவது பிரிவு பிரகாரம் இவ்வறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

நிதிக் கூற்றுகளில் 2018 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுகள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியல்லாத அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்கு வழங்கும் உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக அங்கீகரிக்கப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்கவும் 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் 38 ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்கவும், சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு கணக்கு வழங்கும் உத்தியோகத்தர் பொறுப்பாக இருத்தல் வேண்டும்.

2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கண்காய்வுச் சட்டத்தில் 16(1) பிரிவு பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் கால ரீதியான நிதிக் கூற்றுகளை தயாரிப்பதற்கு முடியுமானவாறு தனது வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக உரியவாறான புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் என்பன பேணிச் செல்லப்படுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தில் 38(1) (இ) உப பிரிவு பிரகாரம் திணைக்களத்தின் நிதி நிருவாகத்திற்கு பயனுள்ள உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக கணக்கு கொடுக்கும் உத்தியோகத்தர் உறுதியளித்தல் வேண்டுமென்பதுடன், குறித்த முறைமையில் செயல்திறன் தொடர்பாக அவ்வப்போது மீளாய்வு செய்து அதன்படி முறைமையை பயனுள்ளவாறு மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்களை செய்தல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

-------------------------------------------------------------------------------------------------

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கிய நிதிக் கூற்றுகளில், கட்டமைவு மற்றும் உள்ளடக்கம் பொருட்டு அடிப்படையாகக்கொண்ட கொடுக்கல்வாங்கல், நிகழ்வுகள் பொருத்தமானதெனவும் நியாயமானதெனவும் நிதிக் கூற்றுகளில் உள்ளடக்கியுள்ளதாக மதிப்பிடல்.

- பொதுவாக நிதிக் கூற்றுகளை சமர்ப்பிக்கையில், நிதிக் கூற்றுகளில் கட்டமைவு மற்றும் உள்ளடக்கம் பொருட்டு அடிப்படையாகக்கொண்ட கொடுக்கல்வாங்கல், நிகழ்வுகள் பொருத்தமானதெனவும் நியாயமானதெனவும் உள்ளடக்குதல்

எனது கணக்காய்வில் அடையாளம் காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், பிரதான உள்ளக நிருவாக குறைப்பாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு அலுவலர்களை அறிவுறுத்தப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டரீதியான தேவைகள் தொடர்பான அறிக்கைகள்

2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் 6(ஈ) பிரிவு மற்றும் 38 பிரிவு பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) கடந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுகளை தயாரிக்கும் தேவை இல்லாத படியால், மீளாய்விற்கான ஆண்டில் நிதிக் கூற்றுகள் கடந்த ஆண்டுடன் ஒழுங்கமைவானது எனது குறிப்பிட இயலாது.

(ஆ) தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தால் கடந்த ஆண்டுக்கு ஏற்புடையதாக நிதிக் கூற்றுகளை தயாரிக்கும் தேவை இருக்காதபடியால் நிதிக் கூற்றுகள் தொடர்பான பரிந்துரைகளை சமர்ப்பிக்கப்படவில்லை.

# 2 நிதிசார் மீளாய்வு

## 2.1 பொறுப்புகளும் கடப்பாடுகளும்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கு கொடுக்கும் உத்தியோகத்தர்களின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) மீளாய்விற்கான ஆண்டில் மேற் - கொள்ளப்பட்ட மாதிரி பரிசோதனையில் 16 செலவு விடயங்களுக்கு ஏற்புடையதாக அங்கீகரிக்கப்பட்ட ஒதுக்கீட்டு எல்லைகளைக் கடந்து ரூபா. 14.46 மில்லியன் தொகையிலான பொறுப்புகளை மேற்கொள்ளப்பட்டிருந்தது. | ஏற்பாடுகளின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட ஒதுக்கீட்டு எல்லைக்குள் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். | அத்தியாவசிய செலவினங்களை மேற்கொள்ள வேண்டியுள்ளதால் பொறுப்புகளை மேற்கொள்ளப்-பட்டுள்ளது. |
| (ஆ)2018 ஆம் ஆண்டு நவம்பர் 21 ஆந் திகதியில் 267/2018 ஆம் இலக்க அரச கணக்கீட்டு சுற்றறிக்கையில் 3.4 பிரிவு பிரகாரம் பதிவு செய்யப்படாத பொறுப்பினை, முன்னைய ஆண்டுக்கான செலவினமாக 2019 ஆம் ஆண்டில் சீராக்கப்ப-டுதலாகாதென்பதுடன், 2018 ஆம் ஆண்டில் நிதிக் கூற்றுகளில் | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளுதல் | 2018 ஆம் ஆண்டுக்கு ஏற்புடையதாக 2019 ஆம் ஆண்டில் மேற்கொண்ட ஒவ்வொரு கொடுப்பனவுகளையும் குறிப்பிடப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| பொறுப்புகளாக காட்டப்படாத ரூபா.634,039 பெறுமதியினை 2019 ஆம் ஆண்டில் சீராக்கப்பட்டிருந்தது. | | |
| (இ) 2018 ஆம் ஆண்டு நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரச கணக்கு சுற்றறிக்கையில் 3.4 பிரிவு பிரகாரம் நிதிக் கூற்றுகளுடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ள கடப்பாடுகளும் பொறுப்புகளும் கூற்று மற்றும் திறைசேரி கடப்பாடுகளும் பொறுப்புகளும் கூற்று என்பவற்றுக்கிடையில் ரூபா.16.75 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது. இந்த வேறுபாடுகளுக்கான காரணங்கள் தெளிவுபடுத்தப்படவில்லை | சுற்றுநிருபம் பிரகாரம் நிதிக் கூற்றுகளை தயாரிக்கையில் திறைசேரியின் கடப்பாடுகளுடனும் பொறுப்புகளுடனும் இணங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். | கிடைக்கப்பெறாதுள்ள இரசீதுகளில் உண்மையான பெறுமதி அனுமானிப்பதற்கு இயலாதபடியால் அந்தப் பெறுமதி உள்ளடக்கப்ப-டவில்லை. |

**2.2 வைப்புகளின் மீதிகள்**

----------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கு கொடுக்கும் உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| திணைக்களத்தின் பொது வைப்புக் கணக்குகள் 03 இல் 2018 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் மீதி ரூபா.63.14 மில்லியன் ஆகியதுடன், அதனுள் 02 ஆண்டுகள் விஞ்சிய வைப்புகளின் பெறுமதி ரூபா.10.92 மில்லியனாகும். | நிதி ஒழுங்குவிதி 571 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் 02 ஆண்டுகளை விஞ்சிய வைப்புகள் தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். | பிணை நிறுத்தி வைக்கப்படும் காலம் முடிவுற்றுள்ள வைப்புகள் மற்றும் ஏனைய வைப்புகள் என்பவற்றை விடுவிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

## 2.3 வங்கி கணக்குகளை வழிநடாத்தல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கு கொடுக்கும் உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) 2018 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் பிரதான அலுவலகத்தின் வங்கி கணக்கிணக்கில் உள்ளடக்கப்பட்டுள்ள ரூபா.**601,635** ஆன இனம் காணப்படாத கிடைக்கப் -பெறுவனவைகளை இனம் காணப்பட்டு சீராக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. | இனம் காணப்படாத கிடைக்கப் பெறுவனவைகளை இனம் காணப்பட்டு கணக்கில் வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல். | இனம் காணப்படாத கிடைக்கப் பெறுவனவைகளை இனம் காணப்பட்டு அகற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல். |
| (ஆ)திணைக்களத்தின் கருத்திட்டங்களுக்கு | செயலற்றுள்ள வங்கி | இந்தக் கணக்குகளை |

| | | |
|---|---|---|
| பேணிச் செல்லப்படுகின்ற 02 நடைமுறைக் கணக்குகள் 2015 ஆம் ஆண்டுக்கு முன்னர் செயலற்று இருந்ததுடன், 2018 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் அந்தக் கணக்குகளில் மீதி ரூபா.63,150 ஆகியது. | கணக்குகளை மூடிவிடுதல் அல்லது வேறு பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல். | திறன் அபிவிருத்தி கருத்திட்டத்திற்கு JICA என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. |

## 3 தொழில்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கு கொடுக்கும் உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| **2014** ஆம் ஆண்டு பெப்ருவரி 17 ஆந் திகதிய **01/2014** ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையில் 3 (அ) பந்தி பிரகாரம் ஏற்புடைய ஆண்டுக்கு இற்றைப்ப -டுத்திய நிறுவனத்தின் கட்டமைவு, அங்கீகரிக்கப்பட்ட பணியாற்றொகுதி, தற்போது சேவையிலுள்ள பணியாற்றொகுதி தொடர்பான விபரங்கள், வருடாந்த செயற்பாடுகள் தொடர்பான கட்டுநிதி திட்டம் மற்றும் உள்ளக கணக்காய்வு திட்டம் என்பவற்றின் விபரங்கள் மீளாய்விற்கான ஆண்டுக்காக தயாரிக்கப்பட்டிருந்த செயற்றிட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றுநிருப ஏற்பாடுகளுக்கு அமைவாக தயாரிக்கப்படுதல் வேண்டும். | **2019** ஆம் ஆண்டில் இவ் விடயங்கள் உள்ளடக்கப்படுதல். |

## 3.2 கடமைப் பொறுப்புகளை நிறைவேற்றப்படாமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கு கொடுக்கும் உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (ஆ)செயற்றிட்டம் பிரகாரம் 39 தொழில்நுட்பவியல்/தொழில்நுட்ப கல்லூரிகளில் 106 பாடநெறிகளின் பொருட்டு 37,685 மாணவர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. ஆயினும் கணக்காய்விடம் சமர்ப்பித்த முன்னேற்ற அறிக்கைகளின் பிரகாரம் மீளாய்விற்கான ஆண்டில் 113 பாடநெறிகளின் பொருட்டு ஆட்சேர்ப்புச் செய்த மாணவர்களின் எண்ணிக்கை 32,151 மட்டும் ஆகும். அதிலும் 7,579 மாணவர்கள் அல்லது 24% பேர் பாடநெறிகளை விட்டுச் சென்றிருந்தனர். | செயற்றிட்டம்படி எதிர்பார்க்கப்பட்ட நோக்கத்தினை அடைந்துக்கொள்ளுதல் வேண்டும். | இந்த நிலைமை 2020 ஆம் ஆண்டில் குறைத்துக்-கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| (ஆ) 2013 ஆம் ஆண்டு பெப்ருவரி 26 ஆந் திகதிய 01/2013 ஆம் இலக்க மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவின் தொழில்சார் தகைமைகள் சுற்றறிக்கைபடி எல்லா தொழில்சார் பாடநெறிகளையும் முறைப்படி அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமாயினும், 2018 ஆம் அண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் 39 தொழில்நுட்பவியல்/தொழில்நுட்ப கல்லூரிகளில் பேணிச் செல்கின்ற 839 பாடநெறிகளில் 29 தொழில்நுட்பவியல் /தொழில்நுட்பக் கல்லூரிகளில் 73 பாடநெறிகள் மீளாய்விற்கான ஆண்டு இறுதி வரை முறைப்படி அங்கீரிக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றுநிருப ஏற்பாடுகளின்படி எல்லா பாடநெறிகளையும் முறைப்படி அங்கீகரிக்கப்படுதல். | இதில் 61 பாடநெறிகளை 2019 ஆம் ஆண்டு மே மாதமாகும் போது அங்கீகரிக்க-ப்பட்டுள்ளது. |

## 3.3 வெளிநாட்டுதவி கருத்திட்டங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கு கொடுக்கும் உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) அரசாங்க நிருவாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் தாபனப் பணிப்பாளர் நாயகத்தின் 2016 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 16 ஆந் திகதிய EST/7/ALLOW/05/0110ஆம் இலக்க திறன் அபிவிருத்தி மற்றும் தொழில்சார் பயிற்சி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதம் பிரகாரம் வெளியக வளப்பகிர்வாளராக அரச துறை சாராத உத்தியோகத்தருக்கு நாளொன்றுக்கு 06 மணித்தியாலங்கள் மற்றும் அரசு துறை சார்ந்த உத்தியோகத்தருக்கு நாளொன்றுக்கு 03 மணித்தியாலங்களுக்கு மட்டும் கொடுப்பனவு மேற்கொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. ஆயினும் துறைசார் திறன் அபிவிருத்தி மற்றும் தொழில்சார் பயிற்சி அமைச்சின்கீழ் நடைமுறைப்படுத்திய பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களின் பொருட்டு சுற்றுநிருப ஏற்பாடுகளுக்கு புறம்பாக ஒரு வளப்பகிர்வாளரின் பொருட்டு 08 மணித்தியாலங்கள் உள்ளடங்கும் வகையில் திட்டமிடப்பட்டிருந்தது. ஆயினும் வளப்பகிர்வாளரின் கொடுப்பனவு பொருட்டு நாளொன்றுக்கு 06 மணித்தியாலங்கள் மற்றும் 02 மணித்தியாலங்கள் உள்ளடங்கும் வகையில் 02 வளப்பகிர்வாளர்களின் பெயர்கள் உள்ளடக்கப்பட்டு கொடுப்பனவுகள் கணக்கிடப்பட்டிருந்தது. | வெளியக வளப்பகிர்வாளருக்கு நாளொன்றுக்கு செலுத்தப்படும் 06 மணித்தியாலங்களின் பொருட்டு நிகழ்ச்சித்திட்டம் தயாரிக்கப்பட வேண்டுமென்பதுடன், ஒவ்வொரு வெளியக போதனையாளர் களுக்கு நிகழ்ச்சித்திட்டங்களில் பங்குபற்றுவதற்கான கடித ஆவணங்களில் பிரதிகளை இணைத்து வைத்துக் கொள்ளுதல் வேண்டும். அதே போன்று கொடுப்பனவுகளை மேற்கொள்கையில் செவ்வைத்தன்மை தொடர்பாக கவனம் செலுத்தப்படல் வேண்டும். | பதில் வழங்கப்படவில்லை. |
| (ஆ)துறைசார் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் ஒதுக்கீடுகளின் மீது ரூபா. 22.88 மில்லியன் தொகை செலவிடப்பட்டு 2017 ஆம் ஆண்டில் பெப்ருவரி மாதத்தில் இயந்திர தொழில்நுடப்வியல் பாடநெறிக்காக கொள்வனவு செய்த CNCMilling இயந்திரம் 2017 ஆம் ஆண்டு | தேவையினை அடையாளம் காணப்பட்டு சொத்துக்களை கொள்வனவு செய்தல் வேண்டுமென்பதுடன், கொள்வனவு செய்த சொத்துக்களை ஆகக்கூடிய | **2018** ஆம் ஆண்டில் சில பாடநெறிகளில் செய்முறை நடவடிக்கைகளின் பொருட்டும், 2019 ஆம் ஆண்டில் 300 மணித்தியாலங் களிலான பாடநெறியொன்றும் |

| | | |
|---|---|---|
| ஒக்டோபர் மாதத்தில் நுவரெலியா தொழில்நுட்ப கல்லூரியிடம் வழங்கப்பட்டிருந்தது. ஆயினும் அந்த இயந்திரம் பயன்படுத்தப்பட்டு மேற்கொள்கின்ற பாடநெறிகளை தொழில்நுட்பக் கல்லூரியில் நடாத்தப்படாமையால் உரிய இயந்திரம் மீளாய்விற்கான ஆண்டு இறுதி வரை இயக்கப்படாதிருந்தது. அதேபோன்று இந்த இயந்திரம் உபயோகப்படுத்தாமை காணரமாக செயலற்றதாகிவிடுமென்பதால் ஆகக் குறைந்தது நாளொன்றுக்கு 03 – 04 மணித்தியாலங்களுக்கிடையில் 27 KVA ஆன மின்சார நுகர்வின்கீழ் செயற்படுத்த வேண்டியிருந்தது. | கொள்ளளவில் பயன்படுத்தல் வேண்டும். | ஆரம்பிக்கப்பட்டுள்ளது. |

## 3.4 முகாமைத்துவ குறைப்பாடுகள்

-------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கு கொடுக்கும் உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) திணைக்களத்திற்குரிய 13 ஏக்கர் காணியில் 06 காணித் துண்டுகளை வெளியக தரப்புகளிடம் முறையின்றி விடுவிக்கப்பட்டிருந்ததுடன், அந்த சொத்துக்களை சட்டரீதியாக கையளிக்கப்படுதல் அல்லது மீள பெற்றுக்கொள்ளுதல் மீளாய்விற்கான ஆண்டு இறுதி வரை மேற்கொள்ளப்படவில்லை. | சொத்துக்களை சட்டரீதியாக கையளிப்பதற்கு அல்லது மீண்டும் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் | எதிர்காலத்தில் சொத்துக்களை கையளிப்பதற்கு அல்லது சுவீகரித்தக் - கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் |
| (ஆ) ஓராண்டு தொடக்கம் 14 ஆண்டு வரையிலான காலப்பகுதிக்கு ஏற்புடையதாக இடமாற்றங்கள், ஓய்வுபெறுதல் மற்றும் மரணமடைதல் காரணமாக 59 உத்தியோகத்தர் - களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா.1.77 மில்லியன் கடன் மீதிகள் கணக்காய்வு திகதியான 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30 ஆந் திகதி வரை சீராக்கப்படாதிருந்தது. | நிலுவை கடன் மீதி தொடர்பாக நிதி ஒழுங்குவிதி 485 (4) மற்றும் தாபன விதிக் கோவையில் xxiv அத்தியாயத்தில் பந்தி 04 பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். | கருத்து வெளியிடப்படவில்லை. |
| (இ) மீளாய்விற்கான ஆண்டு இறுதியில் வேலைகளை முடிவுறத்தப்படாத 03 கட்டிடங்களுக்கு ஏற்புடையதாக ரூபா. 221.42 மில்லியன் தொகையிலான செய்துவரும் வேலைகளின் பெறுமதி, நிதி நிலைமைக் கூற்றில் செய்துவரும் வேலைகளின்கீழ் குறிப்பிடப்படாது | செய்துவரும் வேலைகளின் பெறுமதியின்கீழ் கணக்கு வைக்கப்படுதல் வேண்டும். | எதிர் வருங் காலத்தில் கணக்குகளில் செவ்வையாக்கப்படும். |

| | | |
|---|---|---|
| சொத்துக்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின்கீழ் காட்டப்பட்டிருந்தது. | | |
| (ஈ)நிதி ஒழுங்குவிதி 891 (01) பிரகாரம் பிணை வைக்கப்பட வேண்டிய உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் தகவல்கள் உள்ளடக்கிய பிணைப் பதிவேடு தயாரிக்கப்படவில்லை. | நிதி ஒழுங்குவிதி **891(1)** குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உள்ளடக்கிய பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பாக பிணை பதிவேடு பேணிச் செல்லுதல் வேண்டும். | எதிர் வருங் காலத்தில் பிணைப் பதிவேடு தயாரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

## 3.5 கணக்காய்வு ஐய வினாக்களின் பொருட்டு பதில் வழங்குதல்

திணைக்களத்தால் பின்வரும் கணக்காய்வு ஐய வினாக்களின் பொருட்டு 2019 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆந் திதியிலும் பதில் வழங்கப்படவில்லை.

| கணக்காய்வு ஐய வினாக்கள் தொடர்பான விபரங்கள் | பரிந்துரை | கணக்கு கொடுக்கும் உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) வேதியல் பரீட்சை - ஹோமாகம தொழில்நுட்பக் கல்லூரி 2018<br><br>(ஆ)கஷ்டமான பாடசாலைகளின் பொருட்டு மேசைகள், கதிரைகள் வழங்கும் சமூக உபசரணை நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான சோதனையிடல் – ஹோமாகம தொழில்நுட்பக் கல்லூரி<br><br>(இ) இயந்திர உபகரணங்களை கொள்வனவு செய்தல் தொடர்பான பரிசோதனை – மருதானை தொழில்நுட்பக் கல்லூரி<br><br>(ஈ) அரசாங்க உத்தியோகத்தரின் முற்பண “பி” கணக்கு பரிசோதனை 2018 ஆம் ஆண்டு | நிதி ஒழுங்குவிதி 155 பிரகாரம் கணக்கு கொடுக்கும் உத்தியோகத்தரால் நிதி ஒழுங்குவிதி 452(1) இல் குறிப்பிடப்பட்டுள்ள கணக்காய்வு ஐயவினா பதிவேட்டினை குறிப்பிடப்பட்ட காலப்பகுதிக்கு பின்னர் பரீட்சித்துப் பார்த்து, கிடைக்கப்பெற்றுள்ள கணக்காய்வு உசாவுதல்களில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைப்பாடுகளை செவ்வையாக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென்பதுடன், குறித்த கணக்காய்வு உசாவுதல்களுக்கு உடனடியாக பதில் வழங்குதல் வேண்டும். அவ்வாறு பதில் | தாமதமின்றி பதில்களை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல். |

| | | |
|---|---|---|
| | வழங்குதல் தாமதமாகும் கணக்காய்வு ஐய வினாக்கள் இருப்பின் அதற்கு இடைக்கால அறிக்கை அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். | |

## 3.6 கணக்காய்விற்கான தகவல்களை சமர்ப்பிக்காமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கு கொடுக்கும் உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| ஹோமாகம தொழில்நுட்பக் கல்லூரியல் எரிவாயு மற்றும் வாயு பற்றவைப்பு (வேல்டிங்) கைத்தொழிற்சாலையை பயன்படுத்தி மேற்கொண்டிருந்த டமான பாடசாலைகளுக்கான மேசை கதிரை வழங்கும் சமூக உபசரணை கருத்திட்டத்திற்கு ஏற்புடையதான கடித ஆவணங்களையும் கடிதக் கோவைகளையும் கணக்காய்விடம் சமர்ப்பிக்கப்படவில்லை. | கணக்காய்வு பரிசோதனை நடவடிக்கைகளின் பொருட்டு ஏற்புடையதான எல்லா கடித ஆவணங்கள் மற்றும் கடிதக் கோவைகளை சமர்ப்பித்தல். | கருத்து தெரிவிக்கப்பட வில்லை |

### 3.7 கணக்கு கொடுக்கும் உத்தியோகத்தரால் மேற்கொள்ள வேண்டிய சான்றுப்படுத்தல்கள்

**2018** ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் 38 ஆவது ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்கு கொடுக்கும் உத்தியோகத்தரால் பின்வரும் விடயங்கள் தொடர்பில் சான்றுப்படுத்தல்களை மேற்கொள்ள வேண்டுமாயினும், அதன் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கு கொடுக்கும் உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) திணைக்களத்தின் நிதி நிருவாகம் பொருட்டு பயனுள்ள உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்வதாக கணக்கு கொடுக்கும் உத்தியோகத்தர் சான்றளித்தல் வேண்டும். மேலும், அந்த முறைமையில் பயனளிக்கும் தன்மை தொடர்பாக அவ்வப்போது மீளாய்வு செய்யப்பட்டு, அதன்படி முறைமைகளை பயனுள்ளவாறு மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்களை மேற்கொள்ள வேண்டுமாயினும், அந்த மீளாய்வுகளை எழுத்துமூலம் மேற்கொண்டு அதன் பிரதியினை கணக்காய்வாளர் அதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டுமாயினும், அவ்வாறான மீளாய்வு மேற்கொள்ளப்பட்டதற்கான கூற்றுகள் கணக்காய்விடம் சமர்ப்பிக்கப்படவில்லை. | 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் 38 ஆவது பிரிவின் ஏற்பாடுகளின்படி நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். | உரிய ஏற்பாடுகளின்படி எதிரவருங் காலத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| (ஆ)கணக்காய்வாளர் அதிபதிக்கு தேவையானவாறு உரிய காலப் பகுதிக்குள் எல்லா கணக்காய்வு ஐய வினாக்களுக்கும் பதில் வழங்கப்படுவதாக கணக்கு கொடுக்கும் உத்தியோகத்தரால் சான்றளித்தல் வேண்டுமாயினும், அறிக்கையில் 3.5 பந்தி பிரகாரம் கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் 38 ஆவது பிரிவின் ஏற்பாடுகளின்படி நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். | தாமதமின்றி பதில் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

### 4. நிலையான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்துக் கொள்ளுதல்.

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கு கொடுக்கும் உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
| --- | --- | --- |
| ---------------------------------- | -------------- | -------------------- |
| நிலையான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்துக் கொள்ளுதல் தொடர்பான ஐக்கிய நாடுகளின் '2030 ஆண்டு நிகழ்ச்சி நிரல்" பிரகாரம் தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சி திணைக்களம் அதன் கடமைகளுடன் தொடர்புடைய நிலையான அபிவிருத்தி நோக்கங்கள், இலக்குகள் மற்றும் அந்த இலக்குகளை அடைந்துக்கொள்வதற்கான திருப்புமுனைகளையும், இலக்குகளை அடைந்துக்கொள்வதற்கான சுட்டிகளை அடையாளம் காணுவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. | தேசிய வரவு செலவு சுற்றறிக்கை இலக்கம் **2/2017** இல் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களின் மீது கவனம் செலுத்தப்பட்டு 2030 ஆண்டாகும்போது நிலையான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்துக்கொள்வதற்காக அந்த இலக்குகளின் மீது நடைமுறைப்படுதல். | இனிவருங் காலங்களில் முறைமைகள் தயாரிக்கப்படும் |

## 5. மனித வளங்களின் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படும்.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கு கொடுக்கும் உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
| --- | --- | --- |
| மீளாய்விற்கான ஆண்டின் இறுதித் திகதியில் மேலதிக பணிப்பாளர் நாயகம் (தொழில்நுட்பக் கல்வி) பதவி, உதவிப் பணிப்பாளர் (நிருவாகம்,) பதவி 02, உதவிப் பணிப்பாளர் (ICT) பதவிகள், (ஆலோசகர் அலுவலர் பதவிகள் 22, மதிப்பீட்டு அலுவலர் (Evaluation Office) பதவிகள் 21, கல்விசாரா பணிற்றொகுதியின் பதவிகள் 698 வெற்றிடமாக இருந்தது. | அத்தியாவசியமான பதவிகளின் பொருட்டு ஆட்சேர்பபுச் செய்தல் மற்றும் மிகை பதவிகள் இருப்பின் திறைசேரியுடன் கலந்துரையாடப்பட்டு பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல். | எதிர்வருங் காலத்தில் ஆட்சேர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |